# யூன்– 20– புதன்

## புனித கிலாரியுஸ்

**ஆண்டவருக்காக நம்பிக்கையுடன் காத்திருப்போரே, நீங்கள் அனைவரும் உள்ளத்தில் வலிமையும் உறுதியும் கொண்டிருங்கள். திபா. 31:24**

### முதல் வாசகம் : 2 அரசர் 2 : 1, 6 – 14

ஆகாபு இறந்தபின் மோவாபியர் இஸ்ரயேலுக்கு எதிராகக் கிளர்ச்சி செய்தனர்.6 அதற்கு அவர்கள் மறுமொழியாக, "வழியில் ஓர் ஆள் எங்களைச் சந்தித்து, "நீங்கள் உங்களை அனுப்பின அரசனிடம் போய், ஆண்டவர் கூறுவது இதுவே இஸ்ரயேலுக்குக் கடவுள் இல்லை என்றா, நீ எக்ரோனின் தெய்வமாகிய பாகால் செபூபிடம் குறிகேட்க ஆள் அனுப்புகிறாய்? நீ கிடக்கும் படுக்கையிலிருந்து எழுந்திருக்க மாட்டாய் அங்கேயே செத்துப் போவாய் இது உறுதி! என்று சொல்லுங்கள்" என்றார் "என்று கூறினர்.அவன் அவர்களிடம், "உங்களைச் சந்திக்க வந்து உங்களிடம் இவற்றை அறிவித்த ஆள் எப்படி இருந்தான்?" என்று கேட்டான்.அவனுக்கு அவர்கள் மறுமொழியாக, "அவர் மயிரடர்ந்த மனிதர் இடையில் தோற்கச்சை அணிந்திருந்தார்" என்றனர். அப்பொழுது அவன், "அந்த ஆள் திஸ்பேயைச் சாந்த எலியாதான்!" என்றான்.உடனே அரசன் ஐம்பதின்மர் தலைவன் ஒருவனை அவனுடைய ஐம்பது வீரரோடு அவரிடம் அனுப்பினான். தலைவனும் சென்று, ஒரு மலையின் உச்சியில் அமர்ந்திருந்த எலியாவைக் கண்டு அவரிடம், "கடவுளின் அடியவரே! கீழே இறங்கிவாரும் இது அரசகட்டளை!" என்றான். எலியா ஐம்பதின்மர் தலைவனுக்கு மறுமொழியாக, "நான் உண்மையாகவே கடவுளின் அடியவனாய் இருந்தால், வானினின்று நெருப்பு இறங்கிவந்து உன்னையும் உன்னோடு இருக்கும் ஐம்பதுபேரையும் சுட்டெரிக்கும்!" என்றார். உடனே வானினின்று நெருப்பு இறங்கி வந்து அவனையும் அவனோடிருந்த ஐம்பதுபேரையும் சுட்டெரித்தது.அகசியா மீண்டும் வேறொரு தலைவனை அவனுடைய வீரரோடு அனுப்பினான். அத்தலைவனும் மேலேறிச் சென்று எலியாவிடம், "கடவுளின் அடியவரே! விரைவாய் கீழே இறங்கிவாரும் இது அரசகட்டளை!" என்றான்.எலியா மறுமொழியாக, "நான் உண்மையாகவே கடவுளின் அடியவனாய் இருந்தால், வானினின்று நெருப்பு இறங்கி வந்து உன்னையும் உன்னோடு இருக்கும் ஐம்பது பேரையும் சுட்டெரிக்கட்டும்!" என்றார். உடனே வானினின்று நெருப்பு இறங்கிவந்து, அவனையும் அவனோடிருந்த ஐம்ப பேரையும் சுட்டெரித்தது.அகசியா மூன்றாம் முறையாகத் தலைவன் ஒருவனை அவனுடைய ஐம்பது வீரரோடு அனுப்பினான். மூன்றாம் தலைவனும் மேலேறிச்சென்று, எலியாவின் முன் முழந்தாளிட்டு, "கடவுளின் அடியவரே! என் உயிரையும், உம் அடியாராகிய இந்த ஐம்பதின்மர் உயிரையும் காத்தருளும்! வானினின்று நெருப்பு இறங்கி வந்து, முன்னைய ஐம்பதின்மர் தலைவர் இருவரையும் அவரவருடைய ஐம்பது வீரர்களையும் சுட்டெரித்துவிட்டது. எனவே, இப்பொழுது என் உயிரைக் காத்தருளும்!" என்று மன்றாடினான்.

**பதில்பாடல் :** ஆண்டவரை நம்புவோரே உள்ளத்தில் உறுதி கொண்டிருங்கள்.

### நற்செய்தி : மத்தேயு6 : 1 – 6,10 - 18

அக்காலத்தில் இயேசு மக்கள் கூட்டத்தை நோக்கிக் கூறியதாவது: மக்கள் பார்க்கவேண்டுமென்று அவர்கள்முன் உங்கள் அறச் செயல்களைச் செய்யாதீர்கள். இதைக்குறித்து நீங்கள் எச்சரிக்கையாய் இருங்கள். இல்லையென்றால் உங்கள் விண்ணகத் தந்தையிடமிருந்து உங்களுக்குக் கைம்மாறு கிடைக்காது. நீங்கள் தர்மம் செய்யும்போது உங்களைப்பற்றித் தம்பட்டம் அடிக்காதீர்கள். வெளிவேடக்காரர், மக்கள் புகழ வேண்டுமென்று தொழுகைக் கூடங்களிலும் சந்துகளிலும் நின்று அவ்வாறு செய்வர். அவர்கள் தங்களுக்குரிய கைம்மாறு பெற்றுவிட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். நீங்கள் தர்மம் செய்யும்போது, உங்கள் வலக்கை செய்வது இடக்கைக்குத் தெரியாதிருக்கட்டும். அப்பொழுது நீங்கள் செய்யும் தர்மம் மறைவாயிருக்கும் மறைவாய் உள்ளதைக்காணும் உங்கள் தந்தையும் உங்களுக்குக் கைம்மாறு அளிப்பார்.நீங்கள் இறைவனிடம் வேண்டும்பொழுது வெளிவேடக்காரரைப்போல் இருக்க வேண்டாம். அவர்கள் தொழுகைக்கூடங்களிலும் வீதியோரங்களிலும் நின்றுகொண்டு மக்கள் பார்க்கவேண்டுமென இறைவேண்டல் செய்ய விரும்புகிறார்கள். அவர்கள் தங்களுக் குரிய கைம்மாறு பெற்றுவிட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.ஆனால் நீங்கள் இறைவனிடம் வேண்டும் பொழுது உங்கள் உள்ளறைக்குச் சென்று, கதவை அடைத்துக்கொண்டு, மறைவாய் உள்ள உங்கள் தந்தையை நோக்கி வேண்டுங்கள். மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்குக் கைம்மாறு அளிப்பார்.உமது ஆட்சி வருக! உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவதுபோல மண்ணுலகிலும் நிறைவேறுக!இன்று தேவையான உணவை எங்களுக்குத்தாரும். எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்தோரை நாங்கள் மன்னித்துள்ளதுபோல எங்கள் குற்றங்களை மன்னியும். எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும், தீயோனிடமிருந்து எங்களை விடுவியும். ("ஆட்சியும் வல்லமையும் மாட்சியும் என்றென்றும் உமக்கே. ஆமென்.")மற்ற மனிதர் செய்யும் குற்றங்களை நீங்கள் மன்னிப்பீர்களானால் உங்கள் விண்ணகத் தந்தையும் உங்களை மன்னிப்பார்.மற்ற மனிதரை நீங்கள் மன்னிக்காவிடில் உங்கள் தந்தையும் உங்கள் குற்றங்களை மன்னிக்க மாட்டார்.மேலும் நீங்கள் நோன்பு இருக்கும்போது வெளிவேடக்காரரைப் போல முகவாட்டமாய் இருக்க வேண்டாம். தாங்கள் நோன்பு இருப்பதை மக்கள் பார்க்கவேண்டுமென்றே அவர்கள் தங்கள் முகங்களை விகாரப்படுத்திக் கொள்கிறார்கள். அவர்கள் தங்களுக்குரிய கைம்மாறு பெற்றுவிட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.நீங்கள் நோன்பு இருக்கும்போது உங்கள் தலையில் எண்ணெய் தேய்த்து, முகத்தைக் கழுவுங்கள். அப்பொழுது நீங்கள் நோன்பு இருப்பது மனிதருக்குத் தெரியாது மாறாக. மறைவாய் இருக்கிற உங்கள் தந்தைக்கு மட்டும் தெரியும். மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்கு ஏற்ற கைம்மாறு அளிப்பார்" என்றார்.

**தியானம்:** இந்த உலகில் மனிதனாக பிறந்த ஒவ்வொருவரும், தங்கள் வாழ்வில் எல்லாவற்றிலும் நிறைவு கொணடவர்களாக இருக்க வேண்டும் என்று விரும்புவது இயல்பு. அதனால் தேவனை அடைவதற்கு எத்தனையோ விதமான செயல்களில் ஈடுபடுகின்றான். முடிவில் அவர் எதிர்பார்த்த முடிவுகிடைத்தால் மகிழ்ச்சியடைவான். கிடைக்காவிட்டால் தடுமாறுகிறான். மரணத்தை விட்டு தப்பித்துக் கொண்டவர் எலியா. இவர் ஆண்டவரின் கட்டளைக்கு செவிசாய்த்ததினால் இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்டவராய் விண்ணகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டதை இன்றைய முதல் வாசகத்தில் காண்கிறோம். நம் இதயத்தில் கடவுளை இழந்து விட்டு புனித இடங்களிலும், வழிபாடுகளிலும் கடவுளைத் தேடுவதில் பயன் என்ன? தனக்கு அருகிலுள்ள மனிதனை கண்ணோக்காது, மதியாது மறந்துவாழும் பொழுது என்ன தர்மம் செய்தாலும், நோன்பிருந்தாலும் நாம் புனிதமாக முடியாது என்பதனை இன்றைய நற்செய்திவாசகம் கூறுகின்றது. பகைமையை மனதில் வளர்த்து அன்புகாட்ட நேரமில்லாதவர்களாக இந்த அவசரயுத்தத்தில் பயணம் செய்து கொண்டிருக்கும் வாழ்வு மழைக்கால் நீர்க் குமிழிபோல் மறந்து போவதில் என்ன பிரயோசனம்? வலக்கை செய்வதை இடக்கை அறியக்கூடாது என்பது வேதாகமவாக்காகும். நாமும் எம்மிடமுள்ளவற்றை சிறிதளவாவது இல்லாதவர்களுக்கு பகிர்ந்துகொடுக்கும் போது ஏற்படும் மகிழ்ச்சியை நாம் எந்தவிடயத்திலும் தேடமுடியாது. கேட்பதால் தான் பெற்றுக்கொள்ளமுடியும். பிறர்நலம் இல்லாத சுயநலம் நம்மை ஒருபோதும் வாழவைக்காது. மற்றவரும் வாழவேண்டும் எனநினைக்கும் பிறர் நலமே எம்மை வாழவைக்கும் என்பதைநம் மனதில் கொண்டுவாழ்வோமாக.